# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

---

**சுற்றறிக்கை எண்:170** **தேதி:14.09.2014.**

## மத்திய சங்கத்திலிருந்து.......

அன்பார்ந்த தோழர்களே,

JACயின் **உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை(PLI)** கோரிக்கை நியாயமானது. நிறுவனம் லாபத்தை அடையவில்லை என்ற காரணத்தை கூறி கடந்த பல வருடங்களாக BSNL ஊழியர்களுக்கு நிர்வாகம் PLIஐ மறுத்து வருகிறது. ஒரு பொதுத்துறை நிறுவனத்தின் PLI என்பது லாபத்தோடு இணைந்ததில்லை என்று மிகத்தெளிவாக கூறியுள்ள DPEயின் வழிகாட்டுதலை நிர்வாகத்திற்கு காட்டியுள்ளோம். 27.06.2014 அன்று JAC மற்றும் நிர்வாகத்திற்கு இடையே நடைபெற்ற பேச்சு வார்த்தையில் DPEயின் வழிகாட்டுதல் அடிப்படையில் நிறுவனத்தின் லாபத்துடன் PLI விஷயத்தை இணைக்கக்கூடாது என்பதை தெளிவாக எடுத்துக் கூறினோம். அது நிர்வாகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில், நிறுவனத்தின் உற்பத்தித் திறன் அடிப்படையில் "புதிய PLI பார்முலா" உருவாக்குவதற்கு ஒரு இணைந்தக் குழு உருவாக்கும் பணி நடைபெற்று வருவதாக கூறியது. இந்த சூழ்நிலையில், புதிய PLI பார்முலா உருவாக்கும் வரை ஆயுத பூஜைக்கு முன் ஒரு மாத ஊதியத்தை இடைக்கால PLIஆக தர வேண்டும் என கோரிக்கை வைத்தது. BSNLEUவின் பொது செயலரும் JACயின் அமைப்பாளருமான தோழர் P.அபிமன்யு இரண்டு முறை நமது CMDயை சந்தித்து இடைக்கால PLI வழங்க வேண்டும் என கோரியுள்ளார். இந்த கோரிக்கை ஏற்கப்படவில்லை என்றால், போராட்டத்தில் ஈடுபடுவதை தவிர ஊழியர்களுக்கு வேறு வழி ஏதும் இல்லை.

**திருப்பித்தாக்குவதை தவிர BSNL ஊழியரகளுக்கு வேறு வழி இல்லை:-** அடுத்த சில மாதங்கள் BSNLல் தொடர்ச்சியாக போராட்டங்கள் நடைபெற உள்ளது. PLI உள்ளிட்ட ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகள் நிர்வாகத்தால் மறுக்கப்பட்டு வருகிறது. E-1 ஊதிய விகிதம் மற்றும் மாற்றப்பட்ட JTO தேர்வு விதிகள் உள்ளிட்டவைகள் நிர்வாகக் குழுவால் ஒப்புதல் தரப்பட்டு விட்டது. நிறுவனம் நஷ்டத்தில் இயங்குவதை காரணம் காட்டி இயக்குனர் குழு இவற்றிற்கு ஒப்புதல் தர மறுத்து விட்டது. இயக்குனர் குழுவின் இந்தப் போக்கு ஏற்றுக் கொள்ள முடியாது. ஒரு புறம் நிர்வகமும், அரசாங்கமும் நிறுவனத்தின் பொருளாதார நிலையை புத்தாக்கம் செய்ய எந்த ஒரு விஷயத்தையும் செய்யவில்லை. இது தொடர்பாக FORUM கொடுத்த ஆலோசனைகளை குப்பைத்தொட்டியில் வீசப்பட்டு விட்டது. மறுபுறம் டிலாய்ட்டி குழுவின் பரிந்துரைகளும், BSNL-MTNL ஆகியவற்றை இணைக்கும் முயற்சியும், இந்த நிறுவனம் மற்றும் ஊழியர்களின் எதிர்காலம் தொடர்பாக மிரட்டிக் கொண்டுள்ளது. இந்த சூழ்நிலையில், திருப்பித் தாக்குவதை தவிர தொழிலாளர்களுக்கு வேறு வழி ஏதும் இல்லை. ஆம் தோழர்களே, நாம் சக்தியாக திருப்பித் தாக்க வேண்டும்.

**போராட்டங்கள் அறைகூவி அழைக்கிறது! நாம் முன்னேறுவோம்!!:-** 23.09.2014 அன்று தர்ணா, 30.09.2014 அன்று இரண்டு மணி நேர வெளிநடப்பு மற்றும் நவம்பர் மாதத்தில் ஒரு நாள் வேலை நிறுத்தம் ஆகியவற்றிற்கு JAC அறைகூவல் விட்டுள்ளது. நம்முடைய நியாயமான கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படாததால் இந்த போராட்டங்கள் தவிர்க்க முடியாததாகி விட்டது. BSNL-MTNL இணைப்பு மற்றும் டிலாய்ட்டி குழு பரிந்துரைகளுக்கு எதிராகவும், BSNLஐ புத்தாக்கம் செய்வதற்கான உறுதியான வழிகள் உருவாக்க வேண்டும் என்றும் கோரி காலவரையற்ற வேலை நிறுத்தத்திற்கு அறை கூவல் விடுவது என FORUM முடிவு செய்துள்ளது. வெகு விரைவில் கூட உள்ள FORUMமின் அடுத்தக் கூட்டத்தில் இந்த போராட்டத்திற்கான தேதி அறிவிக்கப்பட உள்ளது. சுருங்க சொல்ல வேண்டும் என்றால், அடுத்த சில மாதங்கள் போராட்ட காலமாகவும், BSNLல் புயல் வீசும் காலமாகவும் இருக்கப் போகிறது. திருப்பித் தாக்குவதை தவிர நமக்கு வேறு வழி ஏதும் இல்லை. இந்த சூழ்நிலையை சந்திப்பதற்கு மாநில மற்றும் மாவட்ட செயலாளர்கள் முழுமையாக தயாராக இருக்க வேண்டும் என மத்திய சங்கம் கேட்டுக் கொள்கிறது. ஊழியர்கள் மற்றும் BSNLல் உள்ள அனைத்து தொழிலாளர்களின் ஒற்றுமையை பலப்படுத்துவதற்கு தேவையான முன் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறது. எந்தெந்த மாநில/ மாவட்டங்களில் JAC மற்றும் FORUM உருவாக்கப்படவில்லையோ அங்கெல்லாம் உடனடியாக அவை உருவாக்கப்பட வேண்டும். ஒற்றுமை இல்லாமல் BSNLஐ காப்பாற்றவோ, நமது நியாயமான கோரிக்கைகளை வென்றடையவோ இயலாது. ஆம் தோழர்களே, போராட்டங்கள் அறைகூவி அழைக்கிறது! நாம் முன்னேறுவோம்!!

**BSNL-MTNL இணைப்புக் கூட்டத்தில் ஊழியர் தரப்பு எதிர்ப்பு:-** 12.09.2014 அன்று நடைபெற்ற தொழிலாளர்களின் INTERSE SENIORITY தொடர்பாக உருவாக்கப்பட்ட துணைக்குழு கூட்டத்தில் BSNL-MTNL இணைப்பு தொடர்பாக ஊழியர் தரப்பு தனது எதிர்ப்பை தெரிவித்துள்ளது. FORUM கூட்டத்தின் முடிவின் அடிப்படையில், MTNLன் கடன் மற்றும் பங்கு விற்பனை ஆகிய முக்கிய பிரச்சனைகள் முதலில் விவாதித்து தீர்க்கப்படாமல் INTERSE SENIORITY தொடர்பாக விவாதிக்க முடியாது என ஊழியர் தரப்பு உறுப்பினர்கள் நிர்வாகத்திடம் தெரிவித்தனர். BSNL மற்றும் MTNL அதிகாரிகள் முன் BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு இந்த முடிவை விரிவாக விவரித்தார். இதர சங்கங்களின் பிரதிநிதிகளும் இதே நிலையை எடுத்து அரசாங்கம் முதலில் இணைப்பு தொடர்பான முக்கிய பிரச்சனைகள் பற்றி விவாதிக்க வேண்டும் என்றனர். எனவே INTERSE SENIORITY தொடர்பாக எந்த ஒரு விவாதமும் நடைபெறவில்லை. இறுதியில் அரசாங்கத்திற்கு அனுப்புவதற்காக ஊழியர் தரப்பு தனது கருத்துக்களை எழுத்து பூர்வமாக வழங்க நிர்வகம் கேட்டுக் கொண்டது.

**ஊழியர்களின் நியாயமான கவலைகள் தீர்த்து வைக்காமல் BSNL-MTNL இணைப்பு நடப்பதை தடுத்து நிறுத்த போராட்டங்கள் நடத்த FORUM முடிவு:-** 12.09.2014 அன்று நடைபெற்ற FORUM கூட்டத்தில் கீழ்கண்ட முடிவுகள் ஏகமனதாக எடுக்கப்பட்டுள்ளது:

1) BSNL-MTNL இணைப்பு தொடர்பாக அரசாங்கம் வேகமாக செயல்படுகிறது. ஜூன் 2015 இணைப்பிற்கான இலக்கு என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. MTNLன் கடுமையான LIABILITY மற்றும் MTNLன் 46.5% பங்கு விற்பனை மற்றும் ஊழியர் பிரச்சனைகள் ஆகிய

ஊழியர்களின் முக்கிய கவலைகள் தொடர்பாக அரசாங்கம் பேசவில்லை. இந்த பிரச்சனைகள் தீர்க்கப் படாமல் இணைப்பு நடைபெறக்கூடாது என FORUM முடிவு செய்தது.

2) BSNL-MTNL இணைப்பு தொடர்பான பிரச்சனையில் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட் ஏற்கனவே FORUM முடிவு செய்துள்ளது. 12.09.2014 அன்று நடைபெற்ற கூட்டத்தில் BSNL-MTNL இணைப்பு தொடர்பான பிரச்சனைகளோடு, டிலாய்ட்டி குழு பரிந்துரைகள் மற்றும் BSNLன் புத்தாக்கம் தொடர்பான பிரச்சனகளும் போராட்ட கோரிக்கைகளில் இணைக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. விரைவில் நடைபெற உள்ள அடுத்த FORUM கூட்டத்தில் முடிவு செய்யப்படும்.

3) 12.09.2014 அன்று நிர்வாகத்துடன் நடைபெற உள்ள INTERSE SENIORITY தொடர்பான கூட்டத்தில் MTNLன் பங்கு விற்பனை மற்றும் LIABILITY தொடர்பான பிரச்ச்னைகள் தீர்க்கப்படாமல் இந்த பிரச்சனையில் விவாதிக்க முடியாது என நிர்வாகத்துடன் தெரிவிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

**பாதிக்கப்பட்டுள்ள ஜம்மு காஷ்மீர் மக்களுக்கு BSNLன் ஊழியர்கள் ஆதரவு:-** முன்னெப்போதும் இல்லாத வெள்ளம் மற்றும் இயற்கை பேரழிவு காரணமாக பாதிக்கப்பட்ட ஜம்மு காஷ்மீர் மக்களுக்கு நிவாரணமாக BSNL ஊழியர்கள் தங்களின் ஒரு நாள் ஊதியத்தை வழங்க வேண்டும் என தொலை தொடர்பு துறையில் உள்ள பொதுத்துறை நிறுவனமான BSNLல் உள்ள அனைத்து அதிகாரிகள் ஊழியர் சங்கங்களின் அமைப்பான FORUM அறைகூவல் விடுத்துள்ளது.

200க்கும் மேற்பட்ட மக்கள் இறந்துள்ளனர். ஒரு லட்சத்திற்கும் அதிகமான மக்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர். இன்னமும் ஆயிரக்கணக்கான மக்கள் வீட்டுக் கூரைகளில் உள்ளனர். ராணுவமும், விமானப்படையும் மக்களை காப்பாற்றும் பணிகளில் ஈடுபட்டு உள்ளனர். ஆயிரக்கணக்கான வீடுகள் தரைமட்டமாகி உள்ளது. இது ஒரு தேசியப் பேரிடர். தண்ணீர் வடிந்த பின் தான் உண்மையான நஷ்டம் கணக்கிட முடியும். இது போன்ற சூழ்நிலையில், அரசாங்கம் மற்றும் மக்களின் இணைந்த முயற்சிகளின் மூலமே இயல்பு நிலை திரும்ப முடியும். வெள்ளத்தின் காரணமாக வெகுவாக பாதிக்கப்பட்டுள்ள ஜம்மு காஷ்மீரில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள தொலை தொடர்பு சேவைகளை சரி செய்வதற்கு அனைத்து விதமான முயற்சிகளையும் BSNL ஊழியர்கள் மேற்கொள்ள வேண்டும் எனவும் அதற்கு தேவையான அனைத்து உதவிகளையும் நிர்வாகம் செய்ய வேண்டும் எனவும் FORUM கேட்டுக் கொண்டுள்ளது.

**GM(Estt) உடன் சந்திப்பு:-** 11.09.2014 அன்று நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு மற்றும் அமைப்பு செயலாளர் தோழர் M.C. பாலகிருஷ்ணா ஆகியோர் திரு R.K.கோயல் GM(Estt)ஐ சந்தித்து கீழ்கண்ட பிரச்சனைகளை விவாதித்தனர்.

1) BSNLல் பணிபுரியும் தேவையான தகுதிகளை கொண்டுள்ள கேசுவல் ஊழியர்களை டெலிகாம் மெகானிக் LDCE தேர்வு எழுத அனுமதிக்க வேண்டும்.
2) BSNLல் உள்ள கேசுவல் ஊழியர்களுக்கு கண்டிப்பாக 01.10.2000லிருந்து EPF திட்டம் அமுலாக்க வேண்டும்.
3) 01.10.2000லிருந்து TTA மற்றும் ஓட்டுனர் கேடர்களுக்கு வழங்கப்பட்ட ஊதிய விகித உயர்நிலைப் படுத்தலை NEPP திட்டத்தின் கீழ் முதல் பதவி உயர்வாக கணக்கிடாமல் அவர்களுக்கு 01.10.2004 அன்று முதல் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும்.

**CMD உடன் சந்திப்பு**:- 11.09.2014 அன்று BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு மற்றும் அமைப்பு செயலாளர் தோழர் M.C. பாலகிருஷ்ணா ஆகியோர் BSNL CMD திரு A.N.ராய் அவர்களை சந்தித்து கீழ்கண்ட பிரச்சனைகளை விவாதித்தனர்.

1) ஜம்மு காஷ்மீரில் உள்ள BSNL ஊழியர்கள் வெள்ளத்தின் காரணமாக அனைத்தையும் இழந்து விட்ட காரணத்தால் அவர்களுக்கு ஒரு மாத ஊதியத்தை பொருளாதார உதவியாக உடனடியாக வழங்க வேண்டும் என நமது சங்கத்தின் சார்பாக கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.
2) கார்ப்பரேட் அலுவலகத்தின் உயர் நிலை குழு(HPC) பரிவு அடிப்படையிலான பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு மாநிலங்களில் உண்மையான பதவி நியமனம் செய்யப்படும் முன்னர் உயர் கல்வி தகுதி பெற்றிருப்பவர்களுக்கு GROUP C பணி வழங்கப்பட வேண்டும் என நமது சங்கம் கேட்டுக் கொண்டது.
3) டெலிகாம் ஸ்டோர்ஸ் பகுதியில் ERP திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதால் பல சிரமங்களை ஊழியர்கள் சந்திக்கின்றனர். அந்த சிரமங்கள் உடனடியாக களையப்பட வேண்டும். மேலும் எந்த மாநிலத்திலும் ERP திட்டம் அவசர கதியில் அமுல் படுத்தப் படக்கூடாது எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.
4) ஆயுத பூஜைக்கு முன் ஒரு மாத ஊதியத்தை இடைக்கால PLIஆக வழங்க வேண்டும் என மீண்டும் கேட்டுக் கொண்டுள்ளது.
5) BSNLல் உள்ள கேசுவல் ஊழியர்களுக்கு GRATUITY ACT அமுல் படுத்தப்பட வேண்டும் எனவும் சங்கத்தின் சார்பாக கேட்டுக் கொள்ளப்பட்டது.
6) LABOUR ESTABLISHMENT CELL கார்ப்பரேட் அலுவலகத்தில் ESTT பிரிவின் கீழ் செயல்படுவதால் ஒப்பந்த ஊழியர்களின் பிரச்சனை கார்ப்பரேட் அலுவலகத்தில் உள்ள ADMN பகுதிக்கு பதிலாக ESTT பகுதியில் கையாளப்பட வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டது.

தொழிற்சங்க பிரதிநிதிகளின் வாதங்களை பொறுமையாக கேட்டுக் கொண்ட CMD இவற்றை தீர்வு காணும் வகையில் பரிசீலிப்பதாக உறுதி அளித்தார்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

S. Chellappa

**(S.செல்லப்பா)**
**மாநில செயலாளர்**